**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 552/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 29.04.2026.**

| | |
|---|---|
| **Name : கௌரி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தங்கமாபுரிபட்டிணத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 பத்மாவதியை தெரியும். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். கடந்த 2019 ம் வருடம் காலை நேரத்தில் அ.சா.1 யை யாரோ அடித்ததாக சொன்னார்கள். வேறு ஒன்றும் தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சியம் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கக் கோரி, அரசு தரப்பில் கேட்கப்பட்டு அனுமதிக்கப்பட்டு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை—**

2) கடந்த 16.10.2019 ம் தேதி காலை 11.00 மணிக்கு பத்மாவதி சின்னமாரியம்மன் கோவில் தெருவில் இருக்கும் நிலத்திற்கு பத்மாவதி வந்த போது விஜி மற்றும் விமல் ராஜ் நின்று கொண்டிருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அப்போது விஜி மற்றும் பத்மாவதியை பார்த்து கெட்ட வார்த்தையால் என் மேல் புகார் கொடுத்துள்ளாயா என்று சொல்லி பேசினார்களா என்றால் எனக்கு தெரியாது.

3) பிறகு விமல்ராஜிடம் விஜி கீழே கிடந்த கட்டையை எடுத்து புகார் கொடுத்த கையை அடிக்க சொன்ன போது அப்போது தான் புகார் கொடுக்கமாட்டார் என்று

சொன்னார்களா என்றால் எனக்கு தெரியாது. விமல்ராஜ் விறகு கட்டையை எடுத்து பத்மாவதியின் வலது தோள்பட்டையில் ஓங்கி அடித்து காயம் ஏற்படுத்தினாரா என்றால் எனக்கு தெரியாது. பிறகு கொல்லாமல் விடமாட்டேன் என்று விறகு கட்டையை காட்டி மிரட்டிச்சென்றனர் என்றால் இல்லை. சம்பவத்தை நேரில் பார்த்து விட்டு தற்பொழுது எதிரிக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை– இல்லை.

Myilswamy

Digitally signed by Myilswamy
Date: 2026.04.29 17:42:50 +0530

Judicial Magistrate No.II,
Mettur.